# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ).,**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 43/ந/2026, நாள் 14.08.2026**

A. அந்தோணி,
வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
வந்தவாசி நகராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி, கோட்டைக் காலனி, மாதா கோயில் தெரு, எண்.64/19, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. அந்தோணி என்பவரது 23.12.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.12.2025 அன்று பெறப்பட்டு, 43/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி, கோட்டைக் காலனி, மாதா கோயில் தெரு, எண்.64/19, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. அந்தோணி என்பவரின் 23.12.2025 நாளிட்ட புகார் மனுவுடன் இணைத்துள்ள மனுதாரரின் 09.12.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

" நான் வந்தவாசி பேரூராட்சியாக இருந்த போது துப்புரவு பணியாளராக பணியில் சேர்ந்து 30.06.2006ல் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றேன். நான் பணிபுரிந்த காலத்தில் எனது மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பிற்கால வைப்பு நிதிக்கு உண்டான வட்டி தொகை கணக்கிட்டு வழங்குமாறு 13.10.2025ல் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் பொது அலுவலருக்கும் 28.11.2025 அன்று மேல்முறையீட்டு அலுவலருக்கும் கடிதம் எழுதினேன். 01.12.2025 அன்று பொதுத்தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலரிடம் இருந்து ஒரே பதில் தபால் வந்தது.

பதில் விவரம் – தற்பொழுது 2011–2012 முதல் 2023–2024 வரை மட்டுமே சேமநல வட்டித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இந்த பதில் நான் கேட்ட கேள்விக்கு திருப்தியான பதில் இல்லை என்று 08.12.2025 அன்று ஆணையருக்கு தபால் எழுதி உள்ளேன்.

என்னுடைய பணிக்காலத்தில் என்னுடைய ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பிற்கால சேமநல வைப்பு நிதிக்கு உண்டான வட்டி வழங்க ஆவன செய்யுமாறு தங்களை பணிவுடன் வேண்டுகிறேன்.''.

2. மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்பிவைக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் வந்தவாசி நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. எதிர்மனுதாரரான வந்தவாசி நகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

4. இந்நிலையில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான வந்தவாசி நகராட்சி ஆணையர் ஆகியோரை 25.06.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 15.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 25.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"நான் வந்தவாசி பேரூராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றி 30.06.2006ல் ஓய்வு பெற்றேன். பணிக்காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பிற்கால வைப்பு நிதிக்கான வட்டித்தொகை நகராட்சியால் எனக்கு வழங்கப்படவில்லை. 2006ம் ஆண்டு முதல் எனக்கு பிடித்தம் செய்யப்பட்ட பிற்கால வைப்பு நிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படவில்லை.

பணிக்காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பிற்கால வைப்பு நிதிக்கான வட்டித் தொகையினை எனக்கு பெற்றுத்தருமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிந்து வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.".

6. எதிர்மனுதாரரான வந்தவாசி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண்.883 /2026/சி1, நாள் 24.06.2026ல், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பொது சுகாதாரம் பணிகள் மற்றும் குடிநீர் சம்மந்தமான திட்டப்பணிகள் குறித்து மாதாந்திர நேரடி ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ள இருப்பதால், நகராட்சி வருவாய் ஆய்வாளர் திரு. பெ. சிவகுமார் என்பவரை 25.06.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் உரிய ஆவணங்களுடனும், விரிவான அறிக்கையுடனும் கலந்து கொள்ள அனுப்பிவைப்பதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நகராட்சி வருவாய் ஆய்வாளர் திரு. பெ. சிவகுமார் என்பவர் 25.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய பிற்கால வைப்பு நிதி தொகை மற்றும் அதற்குரிய வட்டி தொகை மனுதாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இதற்கான கணக்கீடு விவரங்கள் வந்தவாசி நகராட்சி பதிவேட்டில் உள்ளது. வைப்பு நிதி பதிவேட்டில் பதியப்பட்ட விவரங்களின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பிற்கால வைப்பு நிதி வட்டி தொகையில் தணிக்கைக்காக 10% பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.2167/– மட்டுமே வழங்க வேண்டியுள்ளது. இந்தத் தொகை ரூ.2167/–ஐ (ரூபாய் இரண்டாயிரத்து நூற்றி அறுபத்தி ஏழு மட்டும்) இன்னும் ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு வழங்கப்படும்.

மனுதாரருக்கு இதில் ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் பணிநாட்களில் வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் நேரடியாக வந்து தெளிவு படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்னிலையில் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.".

7. மேலும், மேற்படி விசாரணையின் போது விசாரணைக்கு ஆஜரான நகராட்சி வருவாய் ஆய்வாளர், எதிர்மனுதாரரான வந்தவாசி நகராட்சி ஆணையர் மனுதாரரின் குற்றச்சாட்டுகள் மீதான விரிவான அறிக்கை கடிதம் ந.க.எண்.882/2026/சி1, நாள் 24.06.2026ஐ இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்தார். அதில்–

"வந்தவாசி நகராட்சி தூய்மை பணியாளராக பணிபுரிந்த திரு. ஏ. அந்தோணி என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.06.2006ல் ஓய்வு பெற்றுவிட்டார். தனியருக்கு கீழ்காணும் விவரப்படி பிற்கால சேமநலநிதி கணக்கினை முடித்து தொகை வழங்கப்பட்டுள்ளது.

| பெயர் / பதவி | ஓய்வு பெற்ற தேதி |
|---|---|
| திரு. A. அந்தோணி, தூய்மைப் பணியாளர். | 30.06.2006 |
| Particulars | Amount (Rs) |
| Opening Balance – 2006 - 2007 | 23234 |
| 6th pay Commission Arrear | 3584 |
| 5th pay Commission Interest Aug-2006 | 2373 |
| April-2006 PF Subscription | 600 |
| May -2006 PF Subscription | 600 |
| PF Loan Repayment | 2008 |
| Closing Balance – 2006 - 2007 | 32399 |
| Loan issued on Voucher No.15 Date:30.04.2006 | 26442 |
| 6th Pay Commission issued on Voucher No.42 Date:10.11.2006 | 1985 |
| Total | 28427 |
| Opening Balance as on 2007-2008 | 3972 |
| 5th Pay commission 50% Amount issued on date 02.02.2007 Voucher No.5 | 1986 |
| Closing Balance – 2007 – 2008 and Opening Balance 2008 – 2009 | 1986 |
| 5th Pay Commission 50% Amount issued on date 04.06.2008 Voucher No.20 | 1986 |
| Closing Balance – 2008 - 2009 | 0 |
| PF-Interest (1993 – 94 to 2007 - 2008) | 21617 |
| Interest Amount Payable to Thiru A. Anthony, Retired Sanitary Worker Voucher No. date10.08.2009 | 19450 |
| 10% Deduction Amount Recover for Audit purpose. Amount kept in Deposit Account | 2167 |
| Closing Balance – 2008 - 2009 | 0 |

தனியருக்கு வழங்கப்பட்ட பிற்கால சேமநலநிதி தொகையில் தணிக்கை காரணங்களுக்காக பிடித்தம் செய்து வைப்பு நிதிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ள தொகையை திரு. ஏ. அந்தோணி என்பவருக்கு ரூ.2167/– திரும்ப வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.". எனத் தெரிவித்துள்ளார்.

மேற்படி நகராட்சி ஆணையரின் அறிக்கையுடன் மனுதாரருக்கு பிற்கால சேமநலநிதி தொகையில் தணிக்கை காரணங்களுக்காக பிடித்தம் செய்து வைப்பு நிதிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ள வட்டித் தொகை வழங்குவது குறித்து விவரத்தினை அட்டவணை வாயிலாக இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Opening Balance For PFIC, Vandavasi Municipality, Thiruvannamalai District

| Name | PFNO | Year | Sub. Amount | Withdrawal | Op. Balance | Interest | CB |
|---|---|---|---|---|---|---|---|
| A. Anthony | 20 | 1993 | 2282.00 | 2000.00 | 3817.00 | 469.00 | 4568.00 |
| | | 1994 | 1680.00 | 0.00 | 4568.00 | 632.00 | 6880.00 |
| | | 1995 | 4167.00 | 6400.00 | 6880.00 | 754.00 | 5401.00 |
| | | 1996 | 4705.00 | 3500.00 | 5401.00 | 809.00 | 7415.00 |
| | | 1997 | 2520.00 | 6200.00 | 7415.00 | 815.00 | 4550.00 |
| | | 1998 | 7389.00 | 4500.00 | 4550.00 | 877.00 | 8316.00 |
| | | 1999 | 11957.00 | 12722.00 | 8316.00 | 1150.00 | 8701.00 |
| | | 2000 | 17376.00 | 11860.00 | 8701.00 | 1415.00 | 15632.00 |
| | | 2001 | 19590.00 | 17980.00 | 15632.00 | 1790.00 | 19032.00 |
| | | 2002 | 22440.00 | 22075.00 | 19032.00 | 1966.00 | 21363.00 |
| | | 2003 | 23535.00 | 14200.00 | 21363.00 | 2078.00 | 32776.00 |
| | | 2004 | 29610.00 | 29250.00 | 32776.00 | 2435,00 | 35571.00 |
| | | 2005 | 27852.00 | 25000.00 | 35571.00 | 3021.00 | 41444.00 |
| | | 2006 | 3208.00 | 26442.00 | 41444.00 | 1805.00 | 20015.00 |
| | | 2007 to 2009 | 20015.00 | 0.00 | 0.00 | 1601.00 | 1601.00 |
| **Total** | | | | | | **21617.00** | |

8. மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான வந்தவாசி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மனுதாரர், வந்தவாசி பேரூராட்சியாக இருந்தபோது துப்புரவு பணியாளராக பணியில் சேர்ந்து பணியாற்றி 30.06.2006ல் ஓய்வு பெற்றுள்ளார் என்பதும், பணிக்காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பிற்கால வைப்பு நிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படாமல் உள்ளது என்பதும், பணிக்காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பிற்கால வைப்பு நிதிக்கான வட்டித் தொகையினை பெற்றுத்தர மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது என்பதும், மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய பிற்கால வைப்பு நிதி தொகை மற்றும் அதற்குரிய வட்டி தொகை மனுதாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது என்பதும், வந்தவாசி நகராட்சி பதிவேட்டில் பதியப்பட்டுள்ள கணக்கீட்டு விவரங்களில் பிற்கால வைப்பு நிதி வட்டி தொகையில் 10% ரூ.2167/– தணிக்கை காரணங்களுக்காக பிடித்தம் செய்யப்பட்டுள்ளது என்பதும், ஒரு வார காலத்திற்குள் மேற்படித் தொகை மனுதாரருக்கு வழங்கப்படும் என்பதும், இதில் மனுதாரருக்கு ஏதேனும் சந்தேகங்கள் ஏற்படும்பட்சத்தில், பணி

நாட்களில் அலுவலகத்தில் வந்து தெளிவு பெற்றுக்கொள்ளலாம் என்பதும் எதிர்மனுதாரரான வந்தவாசி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி வருவாய் ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில், மனுதாரரின் சேமநல நிதி வட்டித் தொகையில் 2008–2009ல் தணிக்கை காரணங்களுக்காக வைப்புத் தொகையாக பிடித்தம் செய்யப்பட்ட 10 சதவீதம் தொகை ரூ.2,167/– (ரூபாய் இரண்டாயிரத்து நூற்று அறுபத்தேழு மட்டும்) நகராட்சி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.1655/2023/'டி2, நாள் 06.07.2026ன்வழி அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படித் தொகை மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாக வந்தவாசி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.883/2026/சி1, நாள் 15.07.2026ன் வழி தெரிவிக்கப்பட்டுள்ளதை ஏற்று, இப்பொருள் தொடர்பான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 14ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. Ã. அந்தோணி,
   துப்புரவு பணியாளர் (ஓய்வு)
   எண்.64/19, மாதாகோயில் தெரு,
   கோட்டை காலனி, வந்தவாசி – 60 408,
   திருவண்ணாமலை மாவட்டம்.
2. நகராட்சி ஆணையர்,
   வந்தவாசி நகராட்சி,
   திருவண்ணாமலை மாவட்டம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.